TAMIL NADU LEGISLATURE
2 3 APR 1973
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1973 பிப்ரவரி 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 61 முதல் 65 வரை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண்கள் 66, 67, 68 மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன. இப்பொழுது வினா எண் 69 எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மதுபானங்கள் விற்க அனுமதி

*69. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஒயின், பிராந்தி போன்ற உயர்தர மதுபானக் கடைகள் நடத்த தற்போது எத்தனை பேருக்கு லைசென்சு வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1972-73-ல் இதுவரை 808 பேருக்கு உரிமங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அப்படி உரிமங்கள் வழங்குவதில் ஒரு நகர மன்றத்திற்கு இத்தனை உரிமங்கள்தான் வழங்கப்படும் என்ற முறை ஏதாவது இருக்கிறதா? இல்லையென்றால், மக்கள் அடிப்படையை வைத்துக் கொண்டு, 1973-74-ம் ஆண்டிலிருந்து நகர மன்றத்திற்கு இத்தனை உரிமங்கள் தான் வழங்கப்படும் என்று ஏதாவது முறை வகுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படி முறை வகுப்பது சரியல்ல என்று கருதுகிறேன். யார் யாருக்குத் தேவையோ, அவர்களெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனுச் செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டத்திற்கு உட்பட்டு, உரிமம் வழங்குவார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த உரிமங்களுக்காக எவ்வளவு பணம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது? அதன் விவரங்களை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உரிமம் ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,000 வசூலிக்கிறோம். ரூ. 1,000 டெபாசிட் கேட்கிறோம். மொத்தம் 1971-72-ல் இதுவரை 899 பேர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டதில் 808 பேர்கள் ரூ. 40,40,000 உரிமக் கட்டணம் செலுத்தி 1972-73-ஆம் ஆண்டில் 1—12—1972 வரை உரிமங்களைப் புதுப்பித்திருக்கின்றனர்.

திரு. த. சோணையா: மது பானக் கடை உரிமங்கள் வழங்கியும் சிலர் கடைகளை நடத்த முடியாத அளவுக்குப் போய்விட்டதே, அப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் விசேஷ சலுகை அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்ன சலுகை என்று சொல்லவில்லையே.

திரு. கே. எ. வகாப்: இந்த மதுபானக் கடைகளை வைப்பவர்கள் அதிகமாக லாபம் சம்பாதிக்கிறார்கள் என்பதைக் கருதி, ரூ. 5,000 என்றிருக்கும் கட்டணத்தை ரூ. 10,000 ஆக உயர்த்துவது குறித்து அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஐயாயிரம் ரூபாயே அதிகம் என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைக் குறைப்பதாக உத்தேசம் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: லைசென்ஸ் எந்தெந்த தகுதியின் அடிப்படையில் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, அனுமதி கோரி மனு போட வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள், கோவில்கள், மாதா கோவில்கள், மசூதிகள் ஆகியவை இருக்கும் இடங்களுக்கு அருகாமையில் இத்தகைய கடைகளை வைக்காத வண்ணம் மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணித்து அனுமதி அளிக்கிறார்.

THIRU B. VENKATASWAMY: Sir, I may I know from the Hon. Minister whether these shop-holders are importing costly liquors from foreign countries?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இண்டியன் மேட் ஃபாரின் லிக்கர் தான் விற்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: மது பானக் கடைகள் வைப்பதற்கு லைசன்ஸ் வழங்கும்போது சில விதிகளைக் கடைப்பிடிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அந்த விதிகளையெல்லாம் தாண்டி, பள்ளிக்கூடங்கள்,

கோவில்கள் இருக்கும் இடங்களுக்கு அருகாமையில் சாராயக் கடைகளும் கள்ளுக் கடைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொன்னுலும், அது கவனிக்கப்படாத நிலைமையிலேயே இருக்கிறது. அப்படிப்பட்ட புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேள்வி, மது பானக் கடையைப் பற்றியது. அங்கத்தினர் சொல்வது சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் பற்றியது. அதுபற்றி ஏதாவது தகவல் இருந்து அங்கத்தினர் எழுதியனுப்பினுல் நிச்சயமாக அரசு பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the earnest idea of this Government seems to be to do away with the evils of drink. May I know from the Hon. Minister whether they will take steps to reduce the number of licensee so that gradually it is given up?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மது பானத்தை அருந்தக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. மற்ற மாநிலங்களில் அது இருக்கும் காரணத்தால் இங்கும் மதுவிலக்குத் திட்டத்தை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனுல், கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன்மூலம் குடிக்கின்றவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட முடியும் என்று சொல்ல முடியாது. குடிக்கின்றவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க பிரசாரம் செய்யலாம்.

திரு. நா. வீராசாமி: ஐயாயிரம் ரூபாய் கட்டணம் கொடுக்கும் யாருக்கும் மதுக் கடை வைப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். ஆனுல், டெல்லிக்குச் சென்று ஒரு மர்மப் பேழையில் புகார் வைத்துக் கொடுத்தபோது, ஏதோ மயிலாப்பூரில் உள்ள ஒரு மதுக் கடைக்கு முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அனுமதி கொடுத்தார் என்று தவருன தகவல் கொடுத்தார்களா? அப்படித் தவருன தகவல் கொடுத்தவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசுக்குக் கிடைத்திருக்கும் தகவலின் படி, 'மயிலாப்பூர் ஒயின்ஸ்' என்ற கடையே இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுக் கடையிலேயே குடிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்கிருர்களே, அப்படியானுல், அம்மாதிரி நடக்காமலிருக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கடைகளில் குடிப்பதற்கு சில்லரையில் விற்கக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. எங்காவது அப்படித் தவறான முறையில் கடையிலேயே குடிக்க அனுமதிப்பது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, லைசன்ஸை ரத்து செய்ய முடியும்.

பென்னலூர்பேட்டைத் துணை வட்டத்தில் அபிவிருத்தி வரி

* 70 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னலூர்பேட்டைத் துணை வட்டத்திலுள்ள பல கிராமங்களுக்கு, சுருட்டப்பள்ளிக் கால்வாயின் நீர் பாயாத இடங்களுக்கும், தனித்தீர்வை Betterment Levy போட்டிருப்பது குறித்து மனு ஏதும் அண்மையில் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அபிவிருத்தி வரி Levy of Betterment Contribution விதிப்பது குறித்து இப்பகுதியிலுள்ள கிராமத்திலிருந்து மனு ஏதும் அண்மையில் வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Seats in House of the People

* 61 Q.—THIRU N. K. PALANISWAMY :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have represented to the Centre that the number of seats in the Lok Sabha should continue to be on the basis of the 1951 census?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1951 மக்கட் தொகைக் கணக்கெடுப்புக்குப் பிறகு மக்கட் சபையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அப்படியே இருக்க வேண்டும் என்று இவ்வரசு ஏற்கனவே மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. மத்திய அரசு இவ்வரசின் கருத்தை ஏற்கவில்லை. இருப்பினும் கூடிய சீக்கிரத்தில் அமைக்கப்படவிருக்கும் தொகுதி எல்லை வரையறுக்கும் குழுவிடம், மறுபடியும் மேற்கண்ட கருத்துக்களை விண்ணப்பிக்க தமிழக அரசு உத்தேசித்திருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : மக்கட் சபையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அதிகரிக்கவும் போவதில்லை, குறைக்கவும் போவதில்லை என்று அறிக்கை வந்தது. 1971 ஜனத்தொகை அடிப்படையில் வாக்காளர்களின்